# J.சுத்தானந்தன்

| | | |
|---|---|---|
| பிறந்ததேதி | --- | 21.09.1944 |
| படிப்பு | --- | 1. கலைமகள் கல்வி நிலையம் மாண்டிச்சேரி பள்ளி, ஈரோடு.<br>2. இளைஞர் கல்வி நிலையம் தொடக்கப்பள்ளி, ஈரோடு.<br>3. செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு.<br>4. PUC – PSG கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்.<br>5. B.Sc., (New College, Madras) |
| முகவரி | --- | 145, மீனாட்சி சுந்தரனார் தெரு,<br>திருநகர் காலனி,<br>ஈரோடு – 638 003.<br>0424–2210796, 2214779 |
| Fax | --- | 0424 – 2222379 |

❖ **<u>தலைவர்,தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் :</u>**

60 லட்சம் மக்கள் தொகை கொண்ட நெசவாளர் சமுதாயமான செங்குந்தர் சமுதாயத்தின் ஒரே சங்கமான **தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் பொறுப்பில் 1987 முதல் இன்று வரை.**

❖ **<u>கைத்தறி துறையில்</u>**

○ **<u>ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் :</u>**

1947–ல் தொடங்கப் பெற்ற **ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில்** (ஈரோடெக்ஸ்) 1967 முதல் 1975 வரை **8 ஆண்டுகள் இயக்குநர்** பொறுப்பு, 1975 முதல் 1989 வரை 14ஆண்டுகளும் 1991 முதல் 1996 வரை 5 ஆண்டுகளும் **ஆக மொத்தம் 19 ஆண்டுகள் தலைவர் பொறுப்பு.**

○ **<u>ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவராக இருந்த பொழுது :</u>**

தமிழகத்தின் பல ஊர்களிலும் மற்றும் ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களிலும் விற்பனை **முகவர் உரிமையைத் தந்து ஈரோடெக்ஸ் சரக்குகளின் விற்பனையைப் பெருகச் செய்தது.**

1975–ல் தலைவர் பொறுப்பேற்ற பொழுது ஈரோடெக்ஸ் ஜவுளி விற்பனை ஆண்டுக்கு ரூபாய் 50 லட்சம் என்று இருந்ததை ரூ. 5 கோடி அளவிற்கு உயர்த்தி, ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 25 லட்சம் முதல் ரூபாய் 40 லட்சம் வரை லாபம் ஈட்டி, தமிழகத்தின் **தலை சிறந்த நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் ஒன்றாக வளர்ச்சியடையச் செய்தது.**

10 ஏக்கர் நிலப் பரப்பில் நெசவாளர்களுக்காக மத்திய, மாநில அரசு நிதி உதவியுடன் **110 வீடுகள் கொண்ட குடியிருப்பு கட்டிக் கொடுக்கப்பட்டது. மேற்படி குடியிருப்புக்கு உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்து "சுத்தானந்தன் நகர்" எனப் பெயரிட்டனர்.**

14 ஏக்கர் நிலப் பரப்பில் **142 வீடுகள் கொண்ட மற்றுமொரு குடியிருப்பு** மத்திய மாநில அரசு நிதி உதவியுடன் **கட்டிக் கொடுத்தது.**

சங்கத்தின் அலுவலக விரிவாக்கத்திற்காக ஈரோடு நகரின் மையப் பகுதியில் 8000சதுர அடி இடம் வாங்கி அதில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தில் ரூ.18 லட்சம் கடன் பெற்று **ரூ.30 லட்சம் மதிப்பில் சுமார் 20,000 ச.அடி கட்டடம் கட்டப் பெற்றது.**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் **ஈரோடெக்ஸ் சங்கம் மாநில அளவில் மிகச் சிறந்த நெசவாளர் கூட்டுறவு சங்கம் என மூன்று முறையும், மாவட்ட அளவில் பல முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.**

## ❖ <u>கைத்தறி துறையில் வகித்த பொறுப்புகள் :</u>

**தமிழ்நாட்டின் முதல் கூட்டுறவு நூற்பாலையான திருநெல்வேலி தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையில்** 1979 முதல் 1989வரை பத்து ஆண்டுகள் தேர்ந்தெடுக்கப் பெற்ற **இயக்குநர்பொறுப்பு.**

பாலியஸ்டர் நூல் உற்பத்திக்காக குஜராத் மாநிலம், பரோடவில், மத்திய அரசால் தொடங்கப் பெற்ற **பெட்ரோபில்ஸ் (PETROFILS) கூட்டுறவு நிறுவனத்தில், மத்திய அரசால் நியமிக்கப் பெற்ற இயக்குநராக** 1986 முதல் 2001 வரை 15 ஆண்டுகள்.

புதுடில்லியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் **அகில இந்திய கைத்தறி விற்பனை கூட்டுறவு சங்கத்தில்** 1999 முதல் 2002 வரை 3ஆண்டுகள் **இயக்குநர் பொறுப்பு.**

மேற்படி நிறுவனமும், ஜப்பான், **Sumitomo** நிறுவனமும் இணைந்து தொடங்கிய ஆயத்த ஆடை ஏற்றுமதி நிறுவனமான, **ஆல் இண்டிய ஹேண்ட்லூம் & நிப்பான் அப்பேரல்ஸ் கார்ப்பரேசன் லிட் – ல். (All India Handloom & Nippon Apparels Corporation (P) Ltd., Chennai), 2000–** ஆம் ஆண்டு முதல் **இன்று வரை இயக்குநர் பொறுப்பு. .**

**பெரியார் மாவட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்தில்** 1979 முதல் 1981 வரை 2 ஆண்டுகள், **துணைத் தலைவர் பொறுப்பு,** 1981 முதல் 1989 வரை 8 ஆண்டுகள் **இயக்குநர் பொறுப்பு .**

**கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வு காண மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1998 ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிக்கப் பெற்று, தமிழ்நாடு அரசால் அமைக்கப்பெற்ற கைத்தறி உயர்மட்டக் குழு உறுப்பினர்**

**தமிழ்நாடு அரசால் அமைக்கப்பெற்ற கைத்தறி ஆலோசனைக்குழு உறுப்பினர் –**1997 முதல் 2001 மற்றும் 2005 முதல் 2006 வரை.

**தமிழ்நாடு அரசால் அமைக்கப்பெற்ற நூல் விலை நிர்ணயக் குழு உறுப்பினர் –**1980 முதல் 1989 மற்றும் 1997முதல் 2001 ஆக 19 ஆண்டுகள்.

**மாவட்ட அளவில் மூலப் பொருள் விலை நிர்ணயக்குழு உறுப்பினர் –** 1997 முதல் 2001 வரை 4 ஆண்டுகள்.

❖ <u>**கூட்டுறவுத் துறையில் :**</u>

**ஈரோடு நெசவாளர் கூட்டுறவு பண்டகசாலையின் தலைவர்–** 1975 முதல் 1989 மற்றும் 1996 முதல் 2001 ஆக 14 ஆண்டுகள்.

**ஈரோடு கூட்டுறவு கட்டிட சங்கத்தின் தலைவர் –** 1980 முதல் 1989 வரை 9 ஆண்டுகள்.

**ஈரோடு கூட்டுறவு கட்டிட சங்கத்தின் தலைவராக** இருந்த போது தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் **மாவட்ட அளவில் சிறந்த சங்கமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.**

❖ <u>**இதர துறைகளில் வகித்த பொறுப்புகள் :**</u>

அகில இந்திய வானொலி சென்னை, தொழிலாளர் நிகழ்ச்சிகளின் ஆலோசனைக் குழு உறுப்பினர்

ஈரோடு மாவட்ட வணிக வரி ஆலோசனைக் குழு உறுப்பினர்

ஈரோடு மாவட்ட மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினர்

## ❖ <u>கல்விப்பணியில் :</u>

- <u>தாளாளர் :</u>

**ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி, துடுப்பதி**

**எம் . பி. நாச்சிமுத்து எம் . ஜெகநாதன் பொறியியல் கல்லூரி, சென்னிமலை**

**எம் . பி. நாச்சிமுத்து எம் . ஜெகநாதன் பாலிடெக்னிக் கல்லூரி 1984 முதல் 2003 வரை19ஆண்டுகள், (2001–2002ல் மேற்படி பாலிடெக்னிக் 2001 முதல் பொறியியல் கல்லூரியாக உயர்த்தப்பட்டது.)**

**இரண்டு பொறியியல் கல்லூரிகளிலும், ஆண்டுதோறும் நல்ல மதிப்பெண்கள் பெற்று உயர்கல்வி பெற வசதியற்ற மாணவர்களுக்கு முழுக் கட்டணச்சலுகை அல்லது பகுதிக் கட்டணச் சலுகையுடன் படிக்க வாய்ப்புக் கொடுத்து இதுவரை பல நூறு மாணவர்கள் பயன் பெற்று வாழ்க்கையில் முன்னேறியுள்ளனர்.**

- <u>தாளாளர் :</u>

செங்குந்தர்  மேனிலைப்பள்ளி , ஈரோடு

செங்குந்தர் மகளிர்  மேனிலைப்பள்ளி , ஈரோடு

மீனாட்சி சுந்தரனார் செங்குந்தர் மேனிலைப்பள்ளி , ஈரோடு

செங்குந்தர் கல்வி நிலையம் தொடக்கப் பள்ளி , ஈரோடு

செங்குந்தர் நர்சரி & பிரைமரிப் பள்ளி , ஈரோடு

மொட்டையப்பா உயர்நிலைப்பள்ளி, வள்ளிபுரத்தாம்பாளையம்

லலிதா கல்வி நிலையம் நடுநிலைப்பள்ளி, ஈரோடு.

- <u>தலைவர் :</u>

கோவை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற தனியார் பொறியியல் கல்லூரி நிர்வாகிகளின் சங்கம்.

ஈரோடு மாவட்ட தனியார் பள்ளிகள் சங்கம்.

வள்ளல் சபாபதி மெட்ரிக் மேனிலைப்பள்ளி, சென்னை.

செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர்கள் சங்கம்.

❖ **<u>விளையாட்டுத்துறையில் :</u>**

| | |
|---|---|
| ஈரோடு மாவட்ட கைப்பந்துக் கழகம் | – புரவலர் |
| ஈரோடு மாவட்ட சதுரங்கக் கழகம் | – புரவலர் |
| ஈரோடு மாவட்ட கிரிக்கெட் சங்கம் | – புரவலர் |
| (32 ஆண்டுகளில் முதல் புரவலராக) | |
| ஈரோடு மாவட்ட சிட்டோ ரியோ கராத்தே சங்கம் | – தலைவர் |
| ஈரோடு மாவட்ட ஸ்னூக்கர் & பில்லியர்ட்ஸ் சங்கம் | – தலைவர் |

❖ ***<u>Rotary International:</u>***

Charter President, Rotary Club of Erode Cosmos,

RI Dist.3200, 2000-01,2001-02.

2001-02 : Become, PAUL HARRIS FELLOW

2002-03 : Chairman, Rural Self Help Project, RI Dist.3200.

2003-04 : Chairman, Rotary International Dist.3200 Conference

2004-05 : (i) Regional Co-ordinator Rotary Centenary Year Projects,RI Dist.3200.

(ii) Member, Nominating Committee for Nominating the Dist.Governor 2006-07,RI Dist.3200.

(iii) Become, MAJORDONAR

2005-06: Assistant Governor, Region XVII

2006-07: Member, District Consultative Committee

2007-08: Governor's Special Representative

2008-09: Adviser, Community Service

2009-10: District Adviser - Awards

❖ **<u>வெளிநாடுகள் பயணம் :</u>**

சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, தாய்லாந்து மற்றும் ஸ்ரீலங்கா நாடுகளில் கைத்தறி துணி ஏற்றுமதி மற்றும் தொழிற் கல்வி தொடர்பான பயணம்.

❖ **விருதுகள் :**

**"உத்யோக ரத்தன்"** என்ற விருது கைத்தறி நெசவாளர்களுக்காக ஆற்றிய அரும்பணியைப் பாராட்டி 1985–ல் புதுடெல்லி Indian Institute of Economics Studies என்ற நிறுவனத்தின் சார்பில் அன்றைய **ஜனாதிபதி கியானி ஜெயில் சிங்** அவர்களால் வழங்கப்பட்டது.

**"நெசவாளர் நேசன்"** என்ற பட்டம் 1985–ல் பேரூர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களால் வழங்கப்பட்டது.

**"ஈரோடு நகரின் சிறந்த இளைஞர்"** என்ற விருதினை ஈரோடு ஜேசீஸ் சங்கம் 1983–ல் வழங்கியது.

**"சிறந்த கூட்டுறவாளர்"** என்ற விருது 2000–ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தால் வழங்கப்பட்டது.

**"வாழ்நாள் சேவகர்"** என்ற விருது 2004–ஆம் ஆண்டு Lions Club of Peach Park, Chennai வழங்கியது.

**"கல்வி காவலர்"** என்ற விருதினை 2004–ஆம் ஆண்டு தமிழன் தொலைக்காட்சியும், விஸ்வசேவா டெலி மீடியாவும் இணைத்து வழங்கியது.

**"சேவை செம்மல்"** என்ற விருதினை 2005–ஆம் ஆண்டு **ஈரோடு அரிமா சங்கம்** வழங்கியது.

**"சேவை செம்மல்"** என்ற விருது 2005–ஆம் ஆண்டு **ஈரோடு காவேரி அரிமா சங்கத்தால்** வழங்கப்பட்டது.

**"செங்கோல் ஏந்திய செங்குந்த செம்மல்"** என்ற விருதினை 2007–ஆம் ஆண்டு சின்னத்திரை கலைஞர்கள் வழங்கி சிறப்பித்தார்கள்.

**"சாதனையாளர்"** என்ற விருதினை 2008–ஆம் ஆண்டு **ஈரோடு சாங்கினி அரிமா சங்கம்** வழங்கியது.

**“வாழ்நாள் சாதனையாளர்”** என்ற விருதினை 2008–ஆம் ஆண்டு **ஈரோடு மாநகர பொது மக்கள் சார்பாக தமிழ் பேரவை** இலக்கிய விழாவில் வழங்கப்பட்டது.

**“மனிதரில் புனிதர்”** என்ற விருதினை 2009–ஆம் ஆண்டு **சேலம் ஸ்ரீ அஷ்சயம் சேவா டிரஸ்ட்** 10ஆம் ஆண்டு விழா மற்றும் பகவான் ஸ்ரீ சத்யசாய்பாபா பிறந்த நாள் விழாவில் வழங்கியது.

**“சிறந்த கல்வி வள்ளல்” (Excellence Award in Education)** என்ற விருதினை 2009–ஆம் ஆண்டு **எஜுகேஷன் டுடே** மாத இதழ் வழங்கியது.

**“கல்வித் துறையில் மிகுந்த சிறப்பாளர்”** என்ற விருதினை 2010ஆம் ஆண்டு **ரோட்டரி மாவட்டம் 3202** மாநாட்டின் போது வழங்கியது.

**“எம்.ஜி.ஆர் மனித நேய விருது”** என்ற விருதினை **இதயக்கனி மாத இதழ்** 2010ஆம் ஆண்டு வழங்கியது.